


புதுச்சேரி மாநிலம் கதிர்காமம் தொகுதி திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலை திறப்பு விழா, கலைஞர் நூலகம் திறப்பு விழா மற்றும் கதிர்காமம் தொகுதி திமுக அலுவலக திறப்பு விழா என முப்பெரும் விழா சண்முகாபுரம் காவல் நிலையம் அருகில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை, நூலகம் மற்றும் கழக அலுவலகத்தை திறந்தார். உடன் மாநில அமைப்பாளர் இரா.சிவா எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், BLA2 (வாக்குச்சாவடி முகவர்கள்) நிர்வாகிகளுக்கான வழக்கறிஞர் அணி சார்பில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தொகுதி தேர்தல் பார்வையாளர் நூருல்லா, கே.புருசோத்தமன், கயாஸ்அஹமது, கே.ஆர்.திருப்பதி, எஸ்.தாமோதிரன், டி.சாமுடி, வி.ஜி.அன்பு, ம.ஸ்ரீதர், ஆ.செல்வராஜ், தே.பிரபாகரன், ஏ.சி.தேவகுமார், பூ.சதாசிவம், மு.க.அருள்நிதி, பவித்ரன், டி.தேவராஜ், சாரதி, தென்னரசு, வசிம், பிரபு மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!

# கலைஞரின் வழியில் தமிழகத்தின் உரிமையை முதல்வர் பாதுகாத்து வருகிறார்!

## திருப்பத்தூரில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ பொதுக் கூட்டத்தில் இயக்குனர் கரு.பழனியப்பன் பேச்சு!

சிவகங்கை, செப். 25 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் அண்ணா திடலில் கழகத் தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் உத்திரவின் பேரில் ஓரணியில் தமிழ் நாடு தீர்மானஉறுதி ஏற்பு பொதுக்கூட்டம் சிவ கங்கை மாவட்ட. கழக த்தின் சார்பில் மாவட்ட கழகச் செயலாளர் கூட்டு றவுத்துறை அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற் றது.

ஒன்றிய கழக செயலா ளர் சோ.சண்முகவடிவேல் வரவேற்றுப் பேசினார் . கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்கு மார் எம்.எல்.ஏ. மாவட்ட அவைத்தலைவர் அ.கணே சன், மாவட்ட கழக துணைச் செயலாளர் த. சேங்கைமாறன் , மாவட்ட இளைஞரணி அமைப்பா ளர் நாகனி செந்தில்குமார் , மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் தமிழ் பிரியா , முன்னாள் எம்.எல்.ஏ. மாநில ஆதிதி ராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் எஸ். மாரியப்பன் கென்னடி, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், சிவ கங்கை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் சண்முகம், மாவட்ட சிறு பான்மை அணி அமைப்பா ளர் என்.எம்.சாக்ளா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்கு மார், தலைமை கழக பேச் சாளர் கே.வி.ராமகிருட்டி ணன்,பேரு ராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன் , பிராட்லா தி.க.ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார் கள். தலைமை கழக பேச் சாளர் இயக்குனர் கரு. பழனி யப்பன் கலந்து கொண்டு சிறப்புரையாற் றியதாவது:

கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் பதவி ஏற்ற நாள் முதல் பல் வேறு மக்கள் நலத்திட்டங் களை செயல்படுத்தி வருகி றார். திராவிட மாடல் ஆட்சியின்மூலம் குடும்பத் தில் ஒருவருக்காவது அர சின் பயன்பாடுகள் கிடைந்துள்ளது. இன்று புதிதாக கட்சி தொடங் கியவர்களுக்கு கூட்டம் கூடுகிறது என்று கூறு கிறார்கள். கூட்டம் கூடு வது என்பது சாதாரண



மான விஷயம். அந்த கூட் டம் வாக்காக மாறுகிறதா என்பதை பார்க்க வேண் டும் .

**வாக்குகளை எதிர்பார்த்து திட்டங்கள் தொடங்கவில்லை!**

நான்கரை ஆண்டு தி.மு.க ஆட்சி செய்த சாத னைகள் திட்டங்கள் மக் கள் இந்த ஆட்சி தொடர வேண்டும் என்று விரும்பு கிறார்கள். தமிழக முதல் வர் அவர்கள் அன்பு கரங் கள் திட்டம் ,புதுமைப் பெண் திட்டம் ,காலை உணவு திட்டம் போன்ற திட்டங்கள் எல்லாம் வாக்கு களை எதிர்பார்த்து துவங்கப்பட்ட தல்ல . எதிர்கால சந்ததியினர் வள மானவாழ்க்கை, பொரு ளாதார ரீதியில் முன்னேற வேண்டும் என்பதற்காக துவங்கப்பட்ட திட்டங் கள் ஆகும் .சமூக பார்வை யுடன் சமூக நோக்கில்து வக்கப்பட்ட திட்டங்களா கும். இத்தகைய திட்டங் களை முதல்வர் அவர்கள் திட்டமிட்டு செயல்ப டுத்தி வருகிறார் .மகளிர் உரிமை தொகை என்பது மகளிருக்கு மிகவும் பய னுள்ளதாக உள்ளது.

**தமிழக மக்கள் விழிப்பு மிக்கவர்கள்!**

பீகாரில் 65 லட்சம் வாக்காளர்களை தேர்தல் ஆணையம் எவ்வித ஆதா ரமுமின்றி நீக்கியது. இதே போல் பல்வேறு மாநிலங்க ளில் பா.ஜ.க. ஆட்சி அமை வதற்காக எதையும் செய்ய தயாராக உள்ளார்கள் . தமிழகத் தில் நாம் விழிப் பாக இருக்க வேண்டும். முதல்வர் ஸ்டாலின் தமிழ கத்தில் உள்ளதால் அவ்வ ளவு எளிதாக வாக்காளர் களை நீக்க முடியாது . தமிழக மக்கள் எப்பொழு தும் விழிப்பான வர்கள் . கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையிலான அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும். ஓரணி யில் தமிழ்நாடு சிவகங்கை மாவட்டத்தில் 5 லட்சம் பேர் சேர்ந்துள்ளார்கள். தமிழகம் முழுவதும் கோடிக்கணக்கான பேர் சேர்ந்துள்ளார்கள். ஓரணி யில் தமிழ்நாடு என்பதே நாம் விழிப்புணர்வுடன் உள்ளோம் என்பதை நிரூ பிக்கத்தான். தமிழகத்திற்கு கேடு வரும் போது முத லில் முதல் ஆளாக குரல் கொடுப்பவர் தளபதி அவர்கள்தான்.

**பா.ஜ.க.வினர் போலியாக நடிக்கிறார்கள்!**

கீழடி நாகரிகம் 6000 ஆண்டுகளுக்கு முன்பு தமி ழர்களின் நாகரிகத்தை பறைசாற்றுவதாக அமைந் துள்ளது. .அதை பிரதமர் மோடி ஏற்கவில்லை. இன்று வரை இதற்கு ஒரு வாழ்த்து கூட தெரிவிக்க வில்லை. தமிழ், தமிழ், என்று பேசும் பா.ஜ.க. வி னர், பிரதமர் மோடி ஆகி யோருக்கு தமிழை பிடிக் காது .போலியாக தமிழை பிடிப்பது போல் நடிக்கி றார்கள்.இதை தமிழக மக் கள் நன்றாக அறிவார்கள். கலைஞரின் மகன் என்ப தாலேயே தளபதி ஸ்டாலின் அவர்கள் தமிழ கத்தின் உரிமையை பெறு வதில் எதிர்த்துப் போராடு வதில் முதல் நபராக உள்ளார் .

வருகிற 2026 தேர்தலில் தமிழகத்தில் திமுக கூட் டணி பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற வேண்டும். இரண்டாவது முறையாக முதல்வர் ஸ்டாலின் தலைமையில் ஆட்சி அமைய வேண்டும். அதற்கு ஓரணியில்தீர்மான ஏற்பு கூட்டம் அடித்தள மாக அமைந்திட வேண் டும் .

இவ்வாறு இயக்குனர் கரு . பழனியப்பன் பேசி னார் .

இந்த கூட்டத்தில் முன் னாள் எம்.எல்.ஏ. சுப. மதி யரசன் ,பொதுக்குழு உறுப் பினர்கள் பள்ளத்தூர் கே. எஸ். ரவி, த.உதயகுமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ் . எஸ் . ஏ . வல்லபாய் , மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்த மங்கலம் சேது, அமைப்பா ளர் சிங்கமுத்து,நகர்கழக செயலாளர்கள் பெரி. பாலா,நா. குணசேகரன், க . பொன்னுச்சாமி , ஒன் றிய கழகச் செயலாளர்கள் விராமதி மாணிக்கம், குன் னக்குடி சுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன், திரு மலை முத்துராமலிங்கம், வே .பூபால சிங்கம், யோக .கிருஷ்ணகுமார் எம் .பூமி நாதன், எம் .ஜெயராமன் , நாகனி ரவி, துரை.ராஜா மணி, அ.முத்துச்சாமி, வே. சுப்பிரமணியன் , ஆர்.எம்.கென்னடி, கே . பாலசுப்பிரமணியன் சுப. சின்னதுரை, பெ .மந்த காளை. ஆறு. செல்வரா ஜன், வே.தமிழ்மாறன், பி. செல்வராஜ் , கே. எஸ். ஆனந்த் லெ.மு.ரவிச்சந்தி ரன் , வே.ஆரோக்கியசாமி, கா.வெங்கட். ராமன், மா. அண்ணாத்துரை,எம்.ஏ. கடம்பசாமி, பேரு ராட்சி மன்ற துணைத் தலைவர் காண்முகமது, பேரு ர்கழக செயலாளர்கள் கதிர்வேல்,

கே. பி. எஸ் பழனியப் பன், வி. சி. டி. ராஜு, பக் ருதீன் அலி, ,,பிரம்மையா, பி.ஏ.நஜ்முதீன், ராம. ஜெய ராமன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அணைப்பாளர் கே. எஸ் . நாராயணன் மாவட்ட மகளிர் தொண் டரணிஅமைப்பாளர் திரு மதி ஹேமலதா செந்தில், மகளிரணி துணை அமைப் பாளர்கள் திலகவதி கண் ணன் , மார்கரெட்கமலா, மாவட்ட செய்தி தொடர் பாளர்,அ.அயூப்கான், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சிவ. முத்து வளவன், மாவட்ட தக வல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சசிவர் ணன், துணை அமைப்பா ளர் காளிமுத்து, அயலக அணி, சன்சீமான் சுப் பையா, ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள் ராம. ரவி, ஷாஜகான், பொரு ளாளர், ஏ .எம் .கண் ணன், இளங்கோ, ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார், மாவட்ட பிரதிநிதி சேவியர், அண் ணாமலை தொ.மு.ச. முரு கேசன்,, மாவட்ட இளை ஞரணி துணை. அமைப்பா ளர்கள் பரணிகிட்டு,, கே.எம். பொற்கோ,இளை ஞரணி கரு.மனோகரன், சிவபுரி சேகர் சுப.ஜெயக்கு மார்,,மற்றும் மாவட்டம் முழுவதிலுமிருந்து சார்பு அணி நிர்வாகிகள் ,அதிக அளவில் பெண்கள் கலந்து கொண்டார்கள். பேரூர் கழகச் செயலாளர் ஆர். கார்த்திகேயன் நன்றி கூறி னார். முன்னதாக ஓரணி யில் தமிழ்நாடு குறித்த வீடியோ ஒளிபரப்பப்பட் டது. தொடர்ந்து மேடை யில் அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் ஓரணி யில் தமிழ்நாடு உறுதி மொழியினை கூற இயக்கு னர் கரு.பழனியப்பன் உட் பட அனைவரும் உறுதி மொழியினை ஏற்றார்கள்.

### பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் மூலம்

# சேலம் மாவட்டத்தில் 8,23,700 மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்குகள்!

## சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சேலம், செப். 25 -

பசுமை தமிழ்நாடு இயக்க தினத்தை முன் னிட்டு வனத்துறையின் சார்பில் மரக்கன்றுகள் நடும் பணியினை சுற்று லாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம், அரியானூர் அரசு சட்டக்கல்லூரி வளாகத் தில் மாவட்ட ஆட்சித்த லைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலை யில் தொடங்கி வைத்தார் கள்.

இந்நிகழ்ச்சிக்குப்பின் னர், சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரி வித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் வனப்ப ரப்பை அதிகரித்திடவும், பசுமை போர்வையை விரி வுபடுத்திடவும் பசுமை தமிழ்நாடு இயக்கத்தி னைத் தொடங்கி வைத் தார்கள். பசுமை தமிழ் நாடு இயக்கத்தின் நோக்க மானது மொத்த நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதி நிலத்தை வனப்பரப் பாக மாற்றுவதாகும். அந் தவகையில், இன்றையதி னம் பசுமை தமிழ்நாடு இயக்க தினத்தை முன் னிட்டு வனத்துறையின் சார்பில் மரக்கன்றுகள் நடும் பணியானது சேலம், அரியானூர் அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில் தொடங்கி வைக்கப்பட் டுள்ளது.

தமிழ்நாட்டில் பசுமை பரப்பை அடுத்த 10 ஆண் டுகளுக்குள் 33 சதவீதமாக உயர்த்தும் நோக்கில் பல்



வேறு திட்டங்கள் மூலம் மரக்கன்றுகள் நடவுப்ப ணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அதன் படி பசுமை தமிழ்நாடு இயக்கத்திட்டமானது (GTM) 2022 ம் ஆண்டு முதல் மரக்கன்றுகள் உற் பத்தி மற்றும் நடவுப்பணி கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது இயக்கம் துவங்கப்பட்டு 3ம் ஆண்டு கள் நிறைவடைந்ததை யொட்டி பசுமை தமிழ் நாடு இயக்க தினத்தை கொண்டாடும் வகையில் பசுமைப்பரப்பை அதிக ரிக்கும் பொருட்டும், மரக் கன்றுகள் நடுவதன் அவசி யத்தை குறித்து பொது மக்களிடையே விழிப் புணர்வு ஏற்படுத்தும் வித மாக சேலம் மாவட்டத் தில் பல்வேறு துறைகளின் மூலம் மரக்கன்றுகள் நட வுசெய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மண் வளத்தை மேம்ப டுத்த (soil enrichment), உயிர் பல்வகை தன்மையை அதி கரிக்க (Strengthening Bio diversity). பாரம்பரிய நாவல் பழத்திற்கு முன்னு ரிமை அளிக்கும் வகையில் இத்தினத்தன்று நாவல் மரங்களை அதிகளவில் நடவுசெய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு தற்போது பல்வேறு இடங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றது.

சேலம் மாவட்டம் 5,205 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டுள் ளது. இந்த மொத்த பரப்ப ளவில் 1,717.65 சதுரகிலோ மீட்டர் அதாவது 33 சதவி கிதம் பசுமை நிலப் பரப்ப ளவாக உருவாக்கப்பட வேண்டும். ஆனால், தற் பொழுது சேலம் மாவட் டத்தில் 1,331 சதுர கிலோ மீட்டர் பசுமைப் பரப்பள வாக, அதாவது 28 சதவிகி தமாக உள்ளது. இதனை 33 சதவிகிதமாக அதிகரிக்க இன்னும் 386.65 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு தேவைப்படுகிறது. அடுத்த 10 ஆண்டுகளில் இந்த இலக்கினை அடைய வேண்டும்.

இதற்கு ஆண்டுக்கு 38.67 சதுர கிலோ மீட் டரை வனப் பரப்பளவாக கொண்டுவர வேண்டும்.

நடப்பாண்டு நாவல், புங்கன், புளியன், கொடுக் காபுளி, பரம்பை, ஆயன், மகோகனி, பூவரசு, நீர்ம ருது, சொர்கம், பலா, அத்தி, வேங்கை, தேக்கு, சில்வர் ஓக், மகிழம், மலை வேம்பு உள்ளிட்ட இனங் களில் ரூ.8,23,700 எண் ணிக்கையிலான மரக்கன்று கள் நடுவதற்கு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு இன் றையதினம் முதல் பல் வேறு துறைகளின் மூல மாக நடப்படுகிறது.

சுற்றுச்சூழலைப் பாது காக்கும் வகையில் பசு மைப் போர்வையை இலக் காகக் கொண்டு சேலம் மாவட்டத்தினை 33 சதவி கிதம் வனப் பரப்பளவா கத் திகழச் செய்யும் வகை யில் அனைத்துத் தரப்பினரும் இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும். இவ்வாறு சுற் றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக பள்ளி மாணவ, மாணவியர்களி டையே சுற்றுச்சுழல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மற்றும் மரக்கன்றுகள் நடுதலை ஊக்குவிக்கும் வகையிலும் பல்வேறு பள்ளிகளில் நடத்தப்பட்ட வினாடி வினா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றி தழ் மற்றும் பரிசுகளை சுற் றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங்க் ரவி, வன உதவி பாதுகாவலர் (பயிற்சி) திருமதி லாவண்யா, வன சரக அலு வலர் துரைமுருகன், சட் டக்கல்லூரி முதல்வர் திரு மதி துர்காலட்சுமி உட்பட தொடர்புடைய அலுவலர் கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

### கந்திலி ஒன்றியம் விசமங்கலத்தில்

# அங்கன்வாடி மையக் கட்டடம்!

## அ.நல்லதம்பி திறந்து வைத்தார்!

திருப்பத்தூர், செப். 25 -

கந்திலி ஒன்றியம், விச மங்கலம் ஊராட்சி அங்க நாதவலசை கிராமத்தில் அண்ணா மறுமலர்ச்சி திட் டத்தில் 16.55 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட அங்கன் வாடி கட்டிடம் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, லக்கிநாயக்கன் பட்டி ஊராட்சியில் தர்ம புரி இணைப்பு சாலை முதல் லக்கிநாயக்கன் பட்டி வரை முதலமைச்ச ரின் கிராம சாலைகள் விரி வாக்க திட்டத்தின் கீழ் புதிய தார் சாலை, மற்றும் மட்றப்பள்ளி அரசு மேல் நிலைப்பள்ளிக்கு நபார்டு திட்டத்தின் வாயிலாக 48 லட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டிடம் ஆகி யவற்றிற்கு அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணியினைதுவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒன் றிய கழக செயலாளர்கள். கே.எ.குணசேகரன், க.முரு கேசன், கே.எ.மோகன் ராஜ், ஒன்றிய குழு தலை வர்கள். திருமதி திருமுரு கன், விஜயா அருணாச லம், ஒன்றிய நிர்வாகிகள். குலோத்துங்கன், சி.கே.சுப் பிரமணி, சீனிவாசன், தசர தன், தமயேந்திரன், அன்ப ழகன், விஜயகுமார், சின்ன பையன், சிவலிங்கம், ஒன் றிய கவுன்சிலர்கள். சாந்த குமார், ஹேமாவதிவி னோத்குமார், கஸ்தூரிரகு, ஊராட்சிமன்ற தலைவர் கள்.லட்சுமிமுனிசாமி, மஞ்சுளா பூபதி பொது மக் கள் மற்றும் வார்டு பிரதிநி திகள், கழக முன்னோடி கள், தூய்மை பணியாளர் கள் என திரளாக கலந்து கொண்டனர்.




விழுப்புரம், புதிய பேருந்து நிலையம் அருகில், நகராட்சி திடலில் நடைபெற்ற ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மானம் ஏற்ப பொதுக்கூட்டத்தில் கழக செய்தி தொடர்பு குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் ஆகியோர்களின் முன்னிலையில் பா.ம.க. கட்சியைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் தைலாபுரம் ஊராட்சியைச் சேர்ந்த தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் வினோத்குமார் ஏற்பாட்டில் இளைஞர்கள் தி.மு கழகத்தில் இணைந்தனர். மாவட்டப் பொறுப்புக் குழு உறுப்பினர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், இரா.கண்ணப்பன், ஒன்றியச் செயலாளர் புஷ்பராஜ், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி விஜயகுமார் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



திருப்பத்தூர் மாவட்டம் வசமங்கலம் ஊராட்சியில் அங்கன்வாடி மையக் கட்டடத்தை அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.